படைப்பின் நோக்கம் சரியான அணுகுமுறை

இறைவனின் படைப்பு நோக்கத்தின் அடிப்படையில் மனிதர்கள் ஒவ்வொரு நிமிடமும் சிரமங்களை மேற்கொள்கிறார்கள். அது அவர்கள் மேல் சுமத்தப்பட்ட சோதனையின் ஒரு பகுதியாகும். இறைவனின் படைப்பின் ரகசியத்தில் கஷ்டங்களும் துன்பங்களும் வாழ்க்கையோடு ஒருங்கிணைந்த ஒன்றாகும். இந்த சோதனைகள் மற்றும் துயரங்களில் இருந்து எந்த ஒரு மனிதனும் தன்னை விடுவித்துக் கொள்ள இயலாது. இந்த உலகம் சொகுசு மற்றும் உல்லாசத்திற்கான இடம் அல்ல என்பதை நினைவுபடுத்தவே இந்த ஏற்பாடு. இது சொர்க்கத்திற்கு தான் தகுதியானவன் தானா என்பதை தீர்மானித்து கொள்வதற்கு உண்டான சோதனைக் களம்.

இன்றைய உலகில் மருத்துவ அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் எவ்வளவோ முன்னேறி இருந்தாலும் கூட வாழ்வில் துயரங்களும் சிரமங்களும் இருந்து கொண்டு தான் இருக்கின்றது. படைப்பின் இரகசியத்தை சரிவர புரிந்து கொள்ளாததால், இவையெல்லாம் ஏன் நடக்கிறது என்பதைப் புரிந்து கொண்டு தீர்வு காண்பதற்கு பதிலாக மனிதன் எதிர்முகமாக நடக்கின்றான். இறைவன் தனக்கு ஏற்படுத்திய சோதனையில் தோல்விக்கு மேல் தோல்வி அடைகின்றான்.

இன்றைய சூழலில், மன அழுத்தம் என்பது பெரும்பாலான மக்களுக்கு ஒரு முக்கிய பிரச்சனையாக உள்ளது. இதை சரி செய்வதாக கூறிக் கொண்டு இன்று பல்வேறு நிறுவனங்களும் முளைத்து உள்ளன. இந்த நிறுவனங்கள் இவர்களை நிரந்தமாக குணப்படுத்துவதற்கு பதிலாக அவர்களின் சிந்தனைகளை குறைப்பதன் மூலம் தற்காலிகமான தீர்வை மட்டுமே பெற்றுத் தருகின்றன. மன அழுத்தத்தை கட்டுக்குள் வைத்துக்கொள்வது அல்லது எதிர்மாறாக செயல்படுத்துவது போன்றவற்றை காட்டிலும் மனதைச் செம்மைப்படுத்துவது தான் அதற்குரிய சரியான தீர்வு ஆகும்.

> இனிமையற்ற சூழ்நிலையில் இருந்து இந்த உலகில் மனிதன் சரியான பாடங்களை கற்றுக் கொள்ள வேண்டும்

மனிதனுக்கு ஏற்படும் எல்லாப் பிரச்சனைகளுக்கும் காரணம், இந்த உலகிலேயே எல்லாவற்றையும் அனுபவித்து விட வேண்டும், இந்த உலகிலேயே சொர்க்கத்தை உருவாக்கி விட வேண்டும் என்பது தான். ஆனால் அது இயலாத ஒன்று.

மேலும் இறைவனின் படைப்பு நோக்கத்தின் படி, மனிதன் இந்த நிலையற்ற உலகில் தன்னை தகுதிப்படுத்திக் கொண்டால் அவனுக்கான சொர்க்கம் மறுமையில் தான் கிடைக்கிறது. இதன் பிறகு, படைப்பின் உண்மையை புரிந்து கொண்டு அதற்கேற்றார்ப் போல் வாழ்க்கையை அமைத்து கொள்வதே சரியான அணுகுமுறையாகும். இறைவனின் அன்பைப் பெறுவதை தன் வாழ்வின் இலட்சியமாக கொண்டால் மரணத்திற்குப் பிறகு சொர்க்கத்திற்கான அனுமதியை பெற இயலும். இந்த உலகத்தின் துன்பங்களில் இருந்து மறுமை உலகத்திற்கு செல்வதற்கான இரகசியத்தை உணர்ந்து கொண்டவரே வாழ்க்கையில் வெற்றி பெற்றவர் ஆவார்.

> இந்த உலகில் மனிதனின் நோக்கம் சொர்க்கத்துக்கு செல்ல தகுதியானவர்களாக தன்னை தயார்ப்படுத்திக் கொள்வதே

மனிதனுக்கு ஏற்படும் எல்லா பிரச்சனைகளுக்கும் காரணம், இந்த உலகத்திலேயே எல்லாவற்றையும் அனுபவித்து விடவேண்டும். இந்த உலகத்திலேயே சொர்க்கத்தை உருவாக்கி விட வேண்டும் என்பது தான். ஆனால் அது இயலாத ஒன்று, மேலும் இறைவனின் படைப்பு நோக்கத்தின் படி, மனிதன் இந்த நிலையற்ற உலகில் தன்னை தகுதிப்படுத்திக் கொண்டால் அவனுக்கான சொர்க்கம் மறுமையில் தான் கிடைக்கிறது. இதன் பிறகு, படைப்பின் உண்மையை புரிந்துகொண்டு அதற்கேற்றாற் போல் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதே சரியான அணுகுமுறையாகும். இறைவனின் அன்பைப் பெறுவதை தன் வாழ்வின் இலட்சியமாக கொண்டால் மரணத்திற்கு பிறகு சொர்க்கத்திற்கான அனுமதியைப் பெற இயலும். இந்த உலகத்தில் இருந்துக் கொண்டு மறுமை உலக்திற்கு செல்வதற்கான இரகசியத்தை உணர்ந்து கொண்டவரே வாழ்வில் வெற்றி பெற்றவர் ஆவர்.

- மவுலானா வஹிதுத்தீன் கான்

For more information, contact :

TL 02

GOODWORD

324, Triplicane High Road,
Chennai - 600 005.
☎ +91-44-4352 4599
+91 97908 53944
✉ chennaigoodword@gmail.com

goodwordbooks.com

1, Nizamuddin West Market,
New Delhi - 110 013.
✉ info@goodwordbooks.com

www.alquranmission.org • www.wkhan.net
www.alrisala.org • www.cpsglobal.org

CPS International
centre for peace & spirituality

இறைவனின் படைப்பு திட்டம்



Creation Plan of God (Tamil)

CMYK

இறைவனின் படைப்பு திட்டம்

ஒரு மேற்கத்திய சிந்தனைவாதி எழுதுகையில் “மனிதன் இந்த பரந்த உலகத்திற்கு சிறிதும் சம்பந்தம் இல்லாதது போல் காணப்படுகிறான்“ மனிதன் இந்த உலகத்திற்காகவோ அல்லது உலகம் இந்த மனிதனுக்காகவோ படைக்கப்பட்டதாகத் தோன்ற வில்லை, இந்த உலகமும் மனித படைப்பும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக தோற்றமளிக் கின்றன“ என்று குறிப்பிட்டுள்ளார்.

> சொர்க்கத்துக்கு செல்ல தகுதியான மனிதர்களை தேர்ந்தெடுப்பது தான் மனித படைப்பின் உண்மையான நோக்கம் ஆகும்.

மனிதன் பெற்றுள்ள எண்ணற்ற திறமைகளில் ஒரு சிறிதே இங்கு பயன்படுகின்றது. மனிதன் மரணம் இல்லாத ஒரு வாழ்க்கையை வாழ விரும்பிய போதிலும், அவனுடைய விருப்பமின்றியே மரணம் அவனை சூழ்ந்து கொள்கிறது. மரணம் அவன் வாழ்விற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கிறது. வாழும் போது எண்ணற்ற ஆசைகளை இதயத்தில் சுமக் கின்றான், ஆனால் அவை நிறைவேறாமல் போய் விடுகின்றன. வாழும் போது அவன் கண்ட கனவுகள் எல்லாவற்றையும் நனவாக்க முடிவதில்லை. இந்நிலை ஏழை, பணக்காரன் என இருவருக்கும் ஒன்றே தான்.

இந்த உலக நியதியும் மனித படைப்பும் ஏன் ஒன்றுக் கொன்று ஒத்துப் போகவில்லை? இந்த கேள்விக்கான பதிலை தெரிந்து கொள்ள வேண்டுமெனில் இறைவனின் படைப்பின் நோக்கத்தை விளங்கிக் கொள்வது மிக அவசியம்.

உண்மையாதெனில் இறைவன், மனிதனை ஒரு உன்னதமான நோக்கத்திற்காகவே படைத்துள்ளான். இறைவனின் நோக்கத்தை தெரிந்து கொள்ள மனிதன் முதலில் தன்னைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும். ஒரு இயந்திரத்தை இயக்கும் முன் அதற்கான பயன்பாட்டு முறை குறித்த அறிவு அவசியம் அல்லவா? மேலும் அந்த இயந்திரத்தை வடிவமைத்த பொறியியலாளரை தவிர வேறு யார் அதை சரியாகப் புரிந்து கொள்ள முடியும்? மனிதனின் நிலையும் இதே தான்.

பரந்து விரிந்த இந்த பிரபஞ்சத்தில் பூமியை தவிர வேறு எந்த ஒரு இடத்திலும் மனிதனைப் போன்ற ஒரு படைப்பு காணப்படவில்லை. “படைப்புகளில் மிகச் சிறந்த படைப்பு இந்த மனித படைப்பு“ என்று சரியாகவே சொல்லப்பட்டுள்ளது. அதாவது மற்ற படைப்புகளைக் காட்டிலும் மிகச் சிறந்த மற்றும் மிகவும் அர்த்தமுள்ள படைப்பு ஆகும். அத்தகைய அர்த்தமுடைய படைப்பு, ஒரு உன்னத நோக்கத்திற்காக தான் படைக்கப்பட்டுள்ளது.

ஆம். இறைவன் மனிதனை ஒரு உன்னதமான நோக்கத் துடன் படைத்து இருக்கின்றான். மனிதன் சோதனை மிக்க சொற்ப காலத்தை இந்த நிலையற்ற உலகத்தில் இறைவனின் விருப்பப்படி கழித்தால் பின்னர் இதனைத் தொடர்ந்து அவனுடைய நற்செயல்களுக்கு பகரமாக என்றும் நிலைத்து இருக்கும் மறுமை உலகத்திற்குச் செல்லும் உரிமையை பெறுகிறான். அந்த மறுமை உலகத்தின் மறுபெயர் தான் சொர்க்கம் எனப்படும்.

நாம் வசித்து கொண்டு இருக்கும் தற்போதைய உலகம் படைப்புகளின் அதிபதியான இறைவனால் உருவாக்கப் பட்ட உலகின் முதல் பகுதியாகும். இறப்புக்கு பிறகு நாம் வாழப்போகும், என்றும் நிலைத்திருக்கும் மறுமை உலகம் இதன் மறுபகுதியாகும். இறைவன் மனிதனுடைய வாழ்க்கையை இரு நிலைகளாகப் பிரித்துள்ளான். ஒன்று இறப்பிற்கு முந்தைய குறுகிய கால வாழ்வு மற்றொன்று இறப்பிற்கு பின்னால் வரும் என்றும் நிலைத்திருக்கும் வாழ்வு, இறப்பிற்கு முந்தைய குறுகிய கால வாழ்வு மனிதனுக்கு ஒரு சோதனைக் காலம் ஆகும். இந்த சோதனைக் காலத்தில் அவனுடைய செயல்களுக்கு நற்கூலியாகவோ அல்லது தண்டனையாகவோ மறுமையில் அவனுடைய வாழ்வு அமையப் பெறும். இதுவே இந்த உலகைப் பற்றிய இறைவனின் செயல் திட்டமாகும். தீய மனிதர்கள் என்றும் சொர்க்கத்தில் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். சொர்க்கத்திற்குச் செல்ல தகுதியான மனிதர்களை தேர்ந்தெடுப்பது தான் மனித படைப்பின் உண்மையான நோக்கமாகும்.

சொர்க்கம் என்றால் என்ன?

> எல்லா விதத்திலும் மனித ஆளுமை முழுமை அடையும் இடமே சொர்க்கம்

எல்லா விதத்திலும் முழுமை பெற்ற உலகத்தின் மறுபெயர் தான் சொர்க்கம். அதன் தேடல் ஒவ்வொரு ஆண் மற்றும் பெண்ணிடமும் இருக்கிறது. சொர்க்கத்தில் தான் மனிதன் எல்லா விதத்திலும் திருப்தி அடைய முடியும். மனிதன் தன் வாழ்நாள் முழுவதுமே சொர்க்கத்தை அடைய விருப்பம் கொண்டுள்ளான். மேலும் சொர்க்கம் தகுதியான மனிதர்களை வரவேற்பதற்காக காத்துக் கொண்டு இருக்கிறது.

சொர்க்கத்தில் மனிதன் எப்படி சிந்திக்க வேண்டும் என விரும்புகிறானோ அப்படியே சிந்திக்கிறான். எதைப் பார்க்க ஆசைப்படுகிறானோ அதையே பார்க்கிறான். அங்கே மகிழ்வு தரக்கூடிய இனிய இசையை அவனால் கேட்க முடியும். எதைத் தொட்டால் மிக்க மகிழ்ச்சி கிடைக்குமோ அதை தொட முடியும். அவன் வாழ்க்கையை அர்த்தமுடையதாக ஆக்கக்கூடிய தூய துணைவியரும் அங்கு உண்டு. அங்கே வீசும் காற்று அவனுக்கு வசந்தமாகவும். உண்ணும் உணவு, பருகும் பானம் போன்றவை அவனுடைய இவ்வுலகில் எங்கும் கிடைக்காததாகவும், கற்பனையிலும் பார்க்க முடியாததாகவும் இருக்கும்.

சொர்க்கத்திற்கு செல்ல தகுதியாவது எப்படி?

இந்த சோதனை கால வாழ்க்கையில் இருந்து ஒருவர் மீண்டு சொர்க்கத்திற்கு செல்ல இரண்டு அடிப்படைத் தகுதிகள் தேவைப்படுகின்றன. ஒன்று இறைவன் ஒருவன் என்ற உண்மையை ஏற்றுக் கொள்வது. மற்றொன்று ஒழுக்கமான வாழ்க்கையை மேற்கொள்வது. எந்த ஆண் மற்றும் பெண் இந்தத் தேர்வில் வெற்றி பெறுகிறார்களோ அவர்கள் சொர்க்கம் செல்வார்கள். அங்கு அவர்களுடைய அனைத்து விருப்பங்களும் பூர்த்தியடைகின்றன. எவர் இந்த தேர்வில் தோல்வி அடைகிறார்களோ அவர்கள் என்றென்றும் துன்பம் அளிக்கக் கூடிய நரகத்தில் வீழ்வார்கள்.

> இறைவன் ஒருவன் என்ற உண்மையை கட்டாயத்தின் அடிப்படையில் இல்லாமல் சுய விருப்பத்தில் ஏற்று கொண்டாக வேண்டும்

மனிதனுக்கு இந்த உலகில் முழு சுதந்திரம் கொடுக்கப் பட்டுள்ளது. இருப்பினும் அவனுக்கு கொடுக்கப்பட்ட இந்த சுதந்திரம் அவனுடைய பிறப்புரிமை அன்று. அது ஒரு தேர்வு தாள் மட்டுமே. அதில் வெற்றி பெற ஒரே வழி, இறைவன் ஒருவன் என்ற உண்மையை கட்டாயத்தின் அடிப்படையில் இல்லாமல் அவனுடைய சுய விருப்பத்தின் அடிப்படையில் முழுமையாக ஏற்றுக் கொண்டு இறைவனுக்கு அடிபணிவது தான். இறைவன் ஒருவனே என்ற உண்மையின் கீழ் அடிபணிவது ஒரு மனிதன் செய்யும் மிகப்பெரிய தியாகம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இவ்வாறு செய்வதன் மூலம் மனிதன் இறைவன் முன்பாக தன்னை எளிமைப்படுத்திக் கொள்வது மட்டும் அல்லாது மற்றவர்களிடமும் நல்லமுறையில் நடந்து கொள்ள உதவுகிறது. இச்சிறந்த பண்பானது அவனை சிகரத்திற்கு உயர்த்தி பின்னர் அதுவே சொர்க்கத்திற்கு வழிகாட்டியாகவும் அமைகிறது.

இரண்டாவது முக்கியமான தேவை ஒழுக்கமான வாழ்க்கையை மேற்கொள்வது. பொதுவாக கோபம், பழிவாங்குதல், பொறாமை, போட்டி மற்றும் வெறுப் புணர்ச்சி போன்றவை மனிதனைக் கெடுக்கக் கூடிய கெட்ட குணங்கள் ஆகும்.

> இறைவனின் படைப்பு திட்டத்தில் கஷ்டங்களும் துன்பங் களும் வாழ்க்கையின் ஒருங்கிணைந்த அம்சமாகும்

இது போன்ற விஷயங்களில் மனிதன் கவனமாக இருக்க வேண்டும். மன இச்சைக்கு ஆட்படாமல் உயர்ந்த கொள்கை மற்றும் எண்ணங்களின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட நற்குணங்கள் தான் மனித வாழ்விற்கு உகந்தது.